# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1956 - 2016 පෙබරවාරි මස 26 වැනි සිකුරාදා - 2016.02.26

*1956 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி IV(அ) - மாகாண சபைகள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | - |
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 710 |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2016, மாச்சு மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2016, மாச்சு மாதம் 04 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**டபிள்யூ. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## வடமத்திய மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு

## வடமத்திய மாகாண அரசாங்க சேவையில் நெசவுக் கைத்தொழில் போதனாசிரியர்கள்/ஆசிரியைகள் வகுப்பு III பதவிகளுக்கு மற்றும் மரவேலை போதனாசிரியர்கள்/ஆசிரியைகள் வகுப்பு III பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சை - 2016

வடமத்திய மாகாண சபையின் மாகாண அரசாங்க சேவையில் நெசவுக் கைத்தொழில் போதானசிரியர்கள்/ஆசிரியைகள் வகுப்பு III பதவிகளுக்கு மற்றும் மரவேலை போதனாசிரியர்கள்/போதனாசிரியைகள் வகுப்பு III பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக கீழ்வரும் தகைமைகளைக் கொண்ட வடமத்திய மாகாணத்தில் நிரந்தர வதிவைக் கொண்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2016.03.28 ஆகும்.

2. ஆட்சேர்ப்பு செய்யப்படும் சந்தர்ப்பத்தில் நிலவும் வெற்றிட எண்ணிக்கைக்கு ஏற்ப ஆட்சேர்ப்பு செய்யப்படும் எண்ணிக்கையைத் தீர்மானிக்கும் அதிகாரம் வடமத்திய மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்குரியதாகும்.

3 **தகைமைகள்.-**

(i) விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டும்;

(ii) சிறந்த உடல், உள ஆரோக்கியமும் நன்னடத்தையும் உடையவராக இருக்க வேண்டும்;

(iii) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்தினத்திற்கு 18 வயதிற்கு குறையாதவராகவும், 35 வயதிற்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும். (தற்போது அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர நியமனத்தில் உள்ளவர்களுக்கு இவ்வயதெல்லை பொருந்தாது.)

(iv) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்தினத்திற்கு கிட்டிய 3 வருட காலத்தில் வடமத்திய மாகாண நிருவாகப் பிரதேசத்தினுள் நிரந்தர வதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.

1. **கல்வித் தகைமைகளும் அனுபவமும்.-**

I. **நெசவுக்கைத்தொழில் போதனாசிரியர்/போதனாசிரியை வகுப்பு III பதவிகளுக்காக-**

இரு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம்/தமிழ் மொழி, கணிதம் உட்பட மூன்று திறமைச்சித்திகளுடன், க. பொ. த. (சா/த) ப் பரீட்சையில் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

மற்றும்

அரச நுண்கலை நிறுவனமொன்றில் உயர் பாடநெறி அல்லது 3 வருட நெசவுக் கைத்தொழில் இறுதிச்சான்றிதழ் பெற்றிரத்தல்.

அல்லது

க. பொ. த. (சா./த.) ப் பரீட்சையில் நெசவுக் கைத்தொழில் பாடத்தில் திறமைச் சித்தி பெற்றிருப்பதுடன் அரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனமொன்றில் ஆகக்குறைந்தது 3 வருட காலங்கள் நெசவாளராக அனுபவம் பெற்றிருத்தல்.

II. **தச்சுக்கைத்தொழில் போதனாசிரியர்/போதனாசிரியை வகுப்பு III பதவிகளுக்காக-**

இரு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம்/தமிழ் மொழி, கணிதம் உட்பட மூன்று திறமைச்சித்திகளுடன், க. பொ. த. (சா/த) ப் பரீட்சையில் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

மற்றும்

கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களத்தில் இயந்திர தச்சுத்தொழில் பயிற்சி நிறுவனமொன்றில் ஒரு வருட தச்சுக் கைத்தொழில் பயிற்சிப் பாடநெறியைக் கற்று சகல பாடங்களிலும் சித்தியடைந்து இறுதிச்சான்றிதழ் பெற்றிரத்தல்.

மற்றும்

ஒரு வருட தச்சுக்கைத்தொழில் உயர் பாடநெறியைப் பயின்று சகல பாடங்களிலும் சித்தியடைந்தமைக்கான சான்றிதழை பெற்றிருத்தல்.

2. **சம்பளத்திட்டம்.**- பொது நிர்வாக சுற்றறிக்கை 6/2006 (iv) இல் MN 1/2006 A க்கு ஏற்ப ரூபா 13,120-10×145-11×170-10 × 240 - 10 × 320 = ரூபா 22,040 ஆகும்.

*3.* ***பரீட்சைக் கட்டணம்.-*** *சகல விண்ணப்பதாரிகளும் பரீட்சைக்கட்டணத்தை வடமத்திய மாகாண சபைக்கு செலுத்த வேண்டும். பரீட்சைக் கட்டணம் ரூபா 500 ஆகும். அப்பரீட்சைக் கட்டணம் வடமத்திய மாகாணத்தில் உள்ள எந்தவொரு பிரதேச செயலகத்திலும் செலுத்தி வழங்கப்படும் என்சீ 100 பற்றுச்சீட்டை விண்ணப்பப் படிவத்தில் உரிய இடத்தில் ஒட்டவேண்டும். இப்பரீட்சைக்கட்டணம் வடமத்திய மாகாண பொது வைப்புக் கணக்கிற்கு வரவு வைக்கக்கூடியவாறு செலுத்த வேண்டும். செலுத்தப்பட்ட பரீட்சைக்கட்டணம் எக்காரணத்தைக் கொண்டும் மீளளிக்கப்படமாட்டாது. (விண்ணப்பப்படிவத்தினதும், பணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட என்சீ100 பற்றுச்சீட்டினதும் நிழற்படப் பிரதியை வைத்துக்கொள்வது பயனுள்ளதாக அமையும்.)*

*4.* ***விண்ணப்பிக்கும் முறையும் உரிய தகவல்களும்.-***

(A) *இவ்விண்ணப்பத்தின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்துக்கு அமைய ஏ 4 அளவிலான (21×29 செ.மீ.) கடதாசியின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி தயாரிக்கப்பட வேண்டியதுடன் இலக்கம் 1 முதல் 8 வரை முதலாவது பக்கத்திலும் 9 தொடக்கம் 12 வரை இரண்டாவது பக்கத்திலும் மீதி மூன்றாவது பக்கத்திலும் அமையக்கூடியவாறு தயாரித்து உரிய தகவல்களை தமது கையெழுத்தில் தெளிவாக உட்படுத்தவேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்றவாறு அமையாத விண்ணப்பங்கள், பூரணமற்ற விண்ணப்பங்கள் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.*

(B) *முறையாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் 2016.03.28 ஆந் திகதிக்கு முன் "செயலாளர், மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு, மாவட்டச் செயலகம், அநுராதபுரம்" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பவேண்டும். விண்ணப்பப் படிவங்களை இட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "நெசவுக் கைத்தொழில் போதனாசிரியர்/போதனாசிரியை வகுப்பு* III *இற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக போட்டிப் பரீட்சை அல்லது தச்சுக்கைத்தொழில் போதனாசிரியர்/போதனாசிரியை வகுப்பு* III *இற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப்பரீட்சை" என எழுத வேண்டும். அரச/மாகாண அரசாங்க சேவையில் இருப்போர் தமது விண்ணப்பப்படிவங்களை தமது நிறுவனத் தலைவரின் ஊடாக அனுப்பவேண்டும். தபாலில் காணாமல் போதல், தாமதமாகக் கிடைத்தல் போன்றவை தொடர்பாக பொறுப்பெறுக்கப்படமாட்டாது.*

*5.* ***பரீட்சை நடைபெறும் மத்திய நிலையங்கள்.-*** *அநுராதபுரம் நகரத்துக்கு அண்மையில் தெரிவுசெய்யப்படும் மத்திய நிலையங்களில் நடைபெறும்.*

*6.* ***விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்.-*** *அரச பாடசாலையொன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, முப்படைகளின் அதிகாரம் பெற்ற அதிகாரி அல்லது வருடத்திற்கு 2,40,360 ரூபாவிற்கு குறையாத வருடாந்த திரட்டிய சம்பளம் பெறும் அரச/மாகாண அரச சேவையில் நிரந்தரப் பதவி வகிக்கும் அரச உத்தியோகத்தர் ஆகியோர்களில் ஒருவர் உறுதிப்படுத்தப்படவேண்டும்.*

*7.* ***ஆட்சேர்ப்பு நடைமுறை.-***

*எழுத்துப்பரீட்சை.- வடமத்திய மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு செயலாளரினால் நடாத்தப்படும்.*

***பாடத்திட்டம்.***

I. *நெசவுக்கைத்தொழில் போதனாசிரியர்கள்/போதனாசிரியைகள் பதவிக்காக.-*

நெசவுதொழில் தொடர்பான கணிதம்
இயந்திரங்கள் வரைதல்
நெசவுத்தொழில் குறிப்புக்கள்
நெசவுத்தொழில் தொடர்பான பொது அறிவு

II. *தச்சுத்தொழில் போதனாசிரியர்கள்/போதனாசிரியைகள் பதவிக்காக.-*

*தச்சுக் குறிப்புக்கள் வரைதல்*
*தச்சுக்கைத்தொழில் கணிதம்*
*தச்சுத்தொழில் ஆயுதங்களும், மரங்களும்*
*கம்புக்கைத்தொழில் தொழில்நுட்பம்*

*எழுத்துப்பரீட்சைக்காக 100 புள்ளிகளும் செயன்முறை பரீட்சைக்காக 100 புள்ளிகளும் வழங்கப்படும். சித்தியடைவதற்காக ஒவ்வொரு பிரிவிலும் 40% புள்ளிகள் பெறவேண்டும்.*

*எழுத்துப்பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரிகளுள் கூடிய புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரிகள் செயன்முறைப் பரீட்சைக்காக அழைக்கப்படுவர். எழுத்துப் பரீட்சை செயன்முறைப் பரீட்சை ஆகிய இரண்டிலும் அதிகூடிய புள்ளிகளைப் பெறுவோர் நேர்முகப்*

பரீட்சைக்கு அழைக்கப்பட்டு ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். வெற்றிடங்களை நிரப்புவது தொடர்பான இறுதித்தீர்மானம் வடமத்திய மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்குரியது.

*8.* **சேவை நிபந்தனைகள்**.- இப்பதவி நிரந்தரமானதும், ஓய்வூதியம் உடையதுமாகும். நியமனம் பெறுவோர் 3 வருட தகுதிகாண் காலத்திற்கு உட்படுவதுடன் வடமத்திய மாகாணத்தின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கு கட்டுப்பட்டுள்ளார்கள்.

செயலாளர்,
மாகாண அரச சேவை ஆணைக்குழு,
வடமத்திய மாகாணம்.

மாதிரி விண்ணப்பப் படிவம்

## வடமத்திய மாகாண அரசாங்க சேவையில் நெசவுக் கைத்தொழில் போதனாசிரியர்கள்/போதனாசிரியைகள் வகுப்பு III பதவிகளுக்காக மற்றும் தச்சுக்கைத்தொழில் போதனாசிரியர்கள்/போதனாசிரியைகள் வகுப்பு III பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2016

(அலுவலக உபயோகத்திற்காக)

1. விண்ணப்பிக்கும் பதவி :-----.
(தச்சுக்கைத்தொழில் போதனாசிரியர் / போதனாசிரியை, நெசவுக்கைத்தொழில் போதனாசிரியர் / போதனாசிரியை எனக் குறிப்பிடுக.)
2. பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் :-----.
(சிங்களம் அல்லது தமிழ் என ஒரு மொழியைக் குறிப்பிடுக.)
3. விண்ணப்பதாரியின் முழுப்பெயர் :-
(i) சிங்களத்தில்/தமிழில் :-----.
(ii) ஆங்கிலத்தில் :-----.
4. விண்ணப்பதாரியின் பெயர் முதலெழுத்துக்களுடன் :-
(i) சிங்களத்தில்/தமிழில் :-----.
(ii) ஆங்கிலத்தில் :-----.
5. விண்ணப்பதாரியின் முகவரி :-
(i) சிங்களத்தில்/தமிழில் :-----.
(ii) ஆங்கிலத்தில் :-----.
6. தேசிய அடையாள அட்டை இலக்கம் :-----.
7. ஆண்/பெண் தன்மை :-----.
(i) பிறந்த திகதி :-----.
(ii) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்திற்கு வயது :-----.
வருடம் :-----. மாதம் :-----. நாட்கள் :-----.
8. விண்ணப்பதாரியின் நிரந்தர வதிவிட மாவட்டம் :-----.
(i) 2016.03.28 ஆந் திகதிக்கு மாவட்டத்தில்
நிரந்தரமாக வசித்தகாலம் :----- இருந்து ----- வரை.
9. கல்வித் தகைமைகள் :- க. பொ. த. (சா./த.) ப் பரீட்சை :

முதலாவது அமர்வு :-----.
வருடம் :-----. பரீட்சைச் சுட்டெண் :-----.

| | பாடங்கள் | பெறுபேறு |
|---|---|---|
| 1. | ............................................ | ...................... |
| 2. | ............................................ | ...................... |
| 3. | ............................................ | ...................... |
| 4. | ............................................ | ...................... |
| 5. | ............................................ | ...................... |
| 6. | ............................................ | ...................... |
| 7. | ............................................ | ...................... |
| 8. | ............................................ | ...................... |
| 9. | ............................................ | ...................... |

இரண்டாவது அமர்வு :-----.
வருடம் :-----. பரீட்சைச் சுட்டெண் :-----.

| | பாடங்கள் | பெறுபேறு |
|---|---|---|
| 1. | ............................................ | ...................... |
| 2. | ............................................ | ...................... |
| 3. | ............................................ | ...................... |
| 4. | ............................................ | ...................... |
| 5. | ............................................ | ...................... |
| 6. | ............................................ | ...................... |
| 7. | ............................................ | ...................... |
| 8. | ............................................ | ...................... |
| 9. | ............................................ | ...................... |

அறிவித்தலில் 4ஆவது பந்தியில் (V) இன் கீழ் பெற்றுள்ள சான்றிதழ்கள் பற்றிய விபரங்கள் :-----.

10. விண்ணப்பதாரி வடமத்திய மாகாண அரசாங்க சேவையில் கடமையாற்றுபவராயின் பதவிப்பெயர், சேவையாற்றும் திணைக்களம் என்பவற்றின் பெயர் மற்றும் முகவரி :-----.

11. பரீட்சைக்கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு பற்றிய விபரம் :
இலக்கமும் திகதியும் :

| பணம் செலுத்திய பற்றுச்சீட்டை இங்கே ஒட்டவும். |
|---|

விண்ணப்பதாரியின் உறுதியுரை.-
இங்கு தரப்பட்டுள்ள விபரங்கள் நான் அறிந்த வரையிலும் எனது நம்பிக்கைக்கு ஏற்றவகையிலும் உண்மையானதும், திருத்தமானதும் என உறுதியளிக்கின்றேன். ஆட்சேர்ப்பு செய்யப்படும் பரீட்சை தொடர்பான நிபந்தனைகளின்படி என்னால் பொய்யான தகவல்கள் வழங்கப்பட்டிருப்பின் பரீட்சை நடைபெறுவதற்கு முன்போ அல்லது பின்போ விண்ணப்பத் தகைமை இரத்துச் செய்யப்படலாம் எனவும் தெரிவு செய்யப்பட்டபின் தெரியவரின் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

-----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்துதல் :

இவ்விண்ணப்பத்தை சமர்ப்பிக்கின்ற திரு./திருமதி/செல்வி ..................................................... என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் எனவும், அவர் ................... ஆந் திகதி எனது முன்னிலையில் அவரின் கையொப்பத்தை இட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

-----,
கையொப்பத்தை உறுதிப்படுத்துபவரின்
கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரின் பெயர் :----.
பதவி முத்திரை :----.
திகதி :----.

12. அரசாங்க சேவையில்/மாகாண அரசாங்க சேவையில் தற்போது சேவையில் இருக்கும் விண்ணப்பதாரிகள் கீழ்வரும் உறுதியுரையை தமது நிறுவனத் தலைவரின் மூலம் அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரியின் மூலம் உறுதிப்படுத்த வேண்டும்.

இத்திணைக்களத்தில் .................. ஆந் திகதி தொடக்கம் ........................... பதவியில் சேவையாற்றும் திரு./ திருமதி/ செல்வி ................................... என்பவர் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் கிட்டிய ஐந்து வருட காலத்தில் சகல சம்பள ஏற்றங்களையும் பெற்றுள்ளார் எனவும், எவ்வித ஒழுக்காற்று தண்டனைகளுக்கும் உட்படவில்லை எனவும், விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட மற்ற விடயங்கள் உண்மையானவை எனவும், திருத்தமானவை எனவும் உறுதிப்படுத்துகின்றேன். மேற்கூறப்பட்ட பதவிக்கு அவர் தேர்ந்தெடுக்கப்பட்டால் விண்ணப்பதாரியை தற்போதுள்ள பதவியிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது என்பதையும் அறியத்தருகின்றேன்.

-----,
திணைக்கள/நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

திகதி :----.
(தயவு செய்து பதவி முத்திரையை இடவும்)

2-735

## வடமேல் மாகாண சபை அரசாங்க சேவையில் புடவைக் கைத்தொழில் திணைக்களத்திற்கு புடவைக் கைத்தொழில் ஆலோசகர்கள் (III தரம்) பதவிக்காக ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சை - 2016

வடமேல் மாகாண அரச சேவையில் புடவைக் கைத்தொழில் திணைக்களத்திற்கு புடவைக் கைத்தொழில் ஆலோசகர்கள் (III ஆம் தரம்) பதவிக்காக ஆட்சேர்ப்பு செய்வதற்கு இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தகைமையுடைய வடமேல் மாகாணத்தில் நிரந்தரமாக வசிக்கும் இலங்கை ஆண், பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பம் கோரப்படுகின்றது.

1.0 வெற்றிட எண்ணிக்கை : 16

**2.0 சம்பளத்திட்டம்.-**

2.1 பொது நிருவாக சுற்றறிக்கை 06/2006 (iv) இல் MN 1/2006 A க்கு ஏற்ப இப்பதவிக்குரிய மாதாந்த சம்பள அளவு ரூபா 13,120-10×145-11×170-10 × 240 - 10 × 320 - ரூபா 22,040 ஆகும்.

**குறிப்பு I**

(அ) இச்சம்பளத் திட்டம் காலத்திற்கு காலம் செய்யப்படும் திருத்தங்களுக்கு உட்பட்டதாகும். இப்பதவி 3 ஆண்டு நன்னடத்தை காலத்திற்கு உட்பட்டதாகும். இப்பதவிக்கு ஆட்சேர்க்கப்படும் உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டவாறு III ஆந் தரத்திற்கு சேர்த்துக்கொண்டு 03 ஆண்டினுள் முதலாவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். II ஆந் தரத்திற்கு பதவியுயர்வு செய்து 3 ஆண்டினுள் இரண்டாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். I ஆந் தரத்திற்கு பதவி உயர்வு செய்து 5 ஆண்டினுள் மூன்றாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.

(ஆ) பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 01/ 2014 படி மற்றும் அதற்கு இடையிலான சுற்றறிக்கைப்படி பதவிக்கு ஈடுபடுத்தி 5 ஆண்டினுள் உரிய அரச கருமமொழி திறமையினை பெற்றுக்கொள்ள வேண்டும்.

2.2 **வயதெல்லை**.- விண்ணப்பதாரிகள், விண்ணப்பப்படிவம் பொறுப்பேற்கப்படும் கடைசித் திகதிக்கு 18 வயதிற்கு குறையாதவராகவும், 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். தற்போது அரச/மாகாண அரச நிரந்தர சேவையில் உள்ள விண்ணப்பதாரிகளுக்கு இவ்வயதெல்லை கவனத்தில் கொள்ளப்படமாட்டாது. அவர்கள் உரிய விண்ணப்பப்படிவங்களை திணைக்களத் தலைவர் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

2.3 **சேவை ஒப்பந்தம்**.-

(i) இந்தப் பதவி நிரந்தரமானது. ஓய்வூதியம் உடையது. தேர்ந்தெடுக்கப்படுகின்ற விண்ணப்பதாரிகள் விதவைகள் மற்றும் அநாதைகள் நிதியத்திற்கு பங்களிப்பு செய்தல் வேண்டும்.
(ii) தாபனக் கோவையில் II ஆம் அத்தியாயத்தில் 10 மற்றும் 12 ஆம் உப பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகள் இப்பதவிக்கு உரித்தாகும்.
(iii) அவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுகின்றவர்கள் வடமேல் மாகாண சபை அதிகாரப் பிரிவினுள் குறிப்பிடப்படுகின்ற எப் பாகத்திலும் சேவை ஆற்றுவதற்கு தயாராக இருத்தல் வேண்டும். இடமாற்றங்களுக்கு உடன்படுதல் வேண்டும்.
(iv) இப்பதவிக்காக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவையின் விதிகளுக்கும், நிதிப் பிரமாணக் குறிப்பிற்கும், திணைக்கள கட்டளைகளுக்கும், வடமேல் மாகாண ஒழுக்காற்று கோவைக்கும், மாகாண நிதி விதிக்கும், வடமேல் மாகாண புடவைக் கைத்தொழில் ஆலோசகர்களுக்காக ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு பிரமாணக் குறிப்பிற்கும், வடமேல் மாகாணத்தினால் காலத்திற்கு காலம் வெளியிடப்படும் வேறு ஒழுங்கு விதிகளுக்கும் கட்டளைகளுக்கும் இணங்கி செயற்படுவதற்கு எல்லா உத்தியோகத்தர்களும் உடன்படுதல் வேண்டும்.

**3. கல்வி மற்றும் வேறு தகைமைகள்.-**

**3.1 கல்வித் தகைமைகள் :**

(அ) கல்வி பொது தராதரச் சான்றிதழ் பத்திரப் (சாதாரண தர) பரீட்சையில் கணிதம் மற்றும் சிங்களம்/தமிழ் மொழிகளுடன் மேலும் இரண்டு (2) பாடங்களில் திறமைச் சித்தியுடன் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாதவாறு ஆறு (6) பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும். இதில் ஒரு அமர்வில் குறைந்தபட்சம் மூன்று பாடங்களுக்கு (3) திறமைச் சித்தியுடன் கணித பாடம் உட்பட (06) ஆறு பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

மற்றும்

(ஆ) கல்வி பொது தராதரச் சான்றிதழ் பத்திரப் (உயர் தர) பரீட்சையில் குறைந்தபட்சம் ஒரு பாடமாவது (சாதாரண பொது பரீட்சை தவிர) சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**விசேடக் குறிப்பு :**

2 வருடங்களுக்கு குறையாத காலம் இத்திணைக்களத்திற்கு உரிய புடவைக் கைத்தொழில் நிலையத்தில் தொழில்நுட்பவியலாளராக சேவை ஆற்றியுள்ள விண்ணப்பதாரிகள் கணித பாடத்திற்கு சாதாரண சித்தி இருந்தால் போதுமானது. (இக்குறிப்பின் கீழ் விண்ணப்பிக்கின்ற விண்ணப்பதாரிகள் நிறுவனத் தலைவரூடாக உறுதிப்படுத்தல் வேண்டும்.)

*3.2* **தொழில் திறமை**.- புடவைக் கைத்தொழில் திணைக்களத்தின் நிறுவனமொன்றில் பயிற்சி பெற்று புடவைக் கைத்தொழில் பற்றிய இறுதிச் சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

**க. கொ.** : மேற்குறிப்பிடப்பட்ட எல்லா கல்வி, தொழில் மற்றும் ஏனைய தகைமைகள் 2016.03.24 ஆந் திகதிக்கு பூர்த்தி செய்து சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

4. **விண்ணப்பதாரிகள்**:-

4.1 இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்;

4.2 போட்டிப் பரீட்சைக்கு முன் நிற்கின்ற விண்ணப்பதாரிகள் விண்ணப்பப்பத்திரம் பொறுப்பேற்கப்படும் கடைசி திகதிக்கு 3 ஆண்டுகளுக்கு குறையாத காலம் வடமேல் மாகாண சபை அதிகாரப் பிரிவில் நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும். (கிராம அலுவலரினால் உறுதிப்படுத்தும் சான்றிதழினை உரிய பிரதேச செயலாளரினால் கையொப்பமிடப்பட்ட சான்றிதழ் மூலம் நேர்முகப் பரீட்சையின் போது குடியிருப்பினை உறுதிப்படுத்தல் வேண்டும்.);

4.3 நல்லொழுக்கமும், உடல் நலமுடையவராக இருத்தல் வேண்டும்;

4.4 பதவிக்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்காக தேவைப்படுகின்ற எல்லா கல்வி, தொழில் மற்றும் வேறு தகைமைகளையும் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்று விண்ணப்பப்படிவம் கோரப்படும் அறிவித்தலில்/வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு அத்தகைமைகள் எல்லா வகையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

5. **ஆட்சேர்ப்பு செய்யப்படும் முறை**.- வடமேல் மாகாண சபை அரச சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படுமாறு வடமேல் மாகாண சபை அரச சேவை ஆணைக்குழு அல்லது அதிகாரம் அளிக்கும் நிறுவனத்தினால் செய்யப்படுகின்ற எழுத்து மூலமான பரீட்சையில் சித்தியடைகின்றவர்கள் செயல்முறைசார் பரீட்சையில் புள்ளி அடிப்படையில் மற்றும் வெற்றிட எண்ணிக்கைப்படி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். அதில் தகைமையுடைய விண்ணப்பதாரிகள் புடவைக் கைத்தொழில் ஆலோசகர் III ஆம் தரத்திற்கு சேர்த்துக்கொள்ளப்படுவர்.

6. **பரீட்சை முறை**.- பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படுவதுடன் விண்ணப்பிக்கின்ற மொழியினை பிறகு மாற்றம் செய்வதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

**பாடங்கள்**

(i) எழுத்துமூலமான பரீட்சை

| பாடங்கள் | காலம் | புள்ளி | சித்தியடைவதற்கான புள்ளி | பாடத்திட்டம் |
|---|---|---|---|---|
| புடவைக் குறிப்பு | 1 மணி 30 நிமிடம் | 100 | 40 | கைத்தறியினால் புடவை நெய்யும் போது உபயோகிக்கின்ற எல்லா பிணைப்பு முறைகள் மற்றும் வடிவமைப்பு பற்றிய அறிவினை பரீட்சித்தல். |
| இயந்திர குறிப்பு | 1 மணி 30 நிமிடம் | 100 | 40 | கைத்தறியின் உதிரிப்பாகங்கள் மற்றும் உபகரணங்களை அறிந்துகொள்ளலும் அவற்றின் பாவனை பற்றிய அறிவினை பரீட்சித்தல். |
| புடவைக் கணிதம் | 1 மணி 30 நிமிடம் | 100 | 40 | கைத்தறியினால் புடவைத் தயாரிக்கும்போது பயன்படுத்தப்படுகின்ற கணித முறை பற்றிய அறிவினை பரீட்சித்தல். |
| பொது அறிவு | 1 மணி 30 நிமிடம் | 100 | 40 | கைத்தறி புடவைத் தயாரிப்பின் சரித்திரம், புதிய போக்கு, சந்தைப்படுத்தல் மற்றும் முகாமைத்துவம் உட்பட கைத்தறி புடவைக் கைத்தொழில் பற்றிய பொது அறிவினை பரீட்சித்தல். |

மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு பாடத்திற்கும் உரிய நான்கு வினாப்பத்திரங்கள் தயாரிக்கப்படும். எழுத்துமூலமான பரீட்சையில் சித்தியடைகின்ற விண்ணப்பதாரிகள் செயல்முறை பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

(ii) செயல்முறைப் பரீட்சை

| பாடங்கள் | காலம் | புள்ளி | சித்தியடைவதற்கான புள்ளி | பாடத்திட்டம் |
|---|---|---|---|---|
| செயல்முறை பரீட்சை | 30 நிமிடங்கள் | 100 | 40 | 1. கைத்தறி புடவை நெய்தல், வடிவமைப்பு, கைத்தறி புடவை நெய்வதற்காக ஒழுங்கமைத்தல், அதற்காக பயன்படுத்துகின்ற உபகரணங்கள் பற்றி செயல் முறை அறிவினை பரீட்சித்தல்.<br><br>2. வழங்கப்பட்ட காலத்தினுள் இயந்திரத்தில் இடப்பட்ட வோப இல் வடிவமைத்து நெய்தல். நெய்யப்பட்ட அளவிற்காக புள்ளிகள் வழங்கப்படும். நெய்யும் போது ஏற்படுகின்ற குறைபாடுகளுக்கு புள்ளிகள் குறைக்கப்படும். (சேதம், ரிட் மார்க், தவறாக மிதிக் கம்புகளை மிதித்தல், சிடல் விழுதல் என்பன) |

7. 500 ரூபாவினை பரீட்சைக் கட்டணமாக வடமேல் மாகாண அரச சேவை ஆணைக்குழு செயலாளரின் இலக்கம் 2003-02-13 ஆன வருமான கணக்கிற்கு வரவு வைக்கும் வகையில் தாம் வசிக்கும் பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள பிரதேச செயலகத்திற்கு செலுத்தி பெற்றுக் கொள்ளப்படும் வ. மே. மா. ச. நி./2 பற்றுச்சீட்டினை விண்ணப்பப் பத்திரத்தில் இணைத்து அனுப்ப வேண்டும். அவ்வாறு நிதி செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினை தவிர வேறு எவ்வித பற்றுச்சீட்டும் நிதி கட்டளைகள் எதுவும் பொறுப்பேற்கப்படமாட்டாது என்பதனை கவனத்தில் கொள்ளவும். இப்பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதி ஒன்றினை தம்மிடம் வைத்துக்கொள்வது பிரயோசனமாதாகும்.

8. **விண்ணப்பிக்கும் முறை:-**

8.1 இவ்வறிவித்தலின் கீழ் காணப்படும் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய, ஏ 4 அளவிலான (செ.மீ. 21×29) கடதாசியில் இரு பக்கத்தினையும் பயன்படுத்தி இலக்கம் 1 தொடக்கம் 5 வரை முதல் பக்கத்திலும் 6 தொடக்கம் மற்றைய பந்திகளை மற்ற பக்கங்களிலும் அமையுமாறு விண்ணப்பப்படிவத்தினை தயாரித்தல் வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவம் 2016.03.24 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன் கிடைக்குமாறு "செயலாளர், வடமேல் மாகாண சபை அரச சேவை ஆணைக்குழு, மாகாண சபை அலுவலகத் தொகுதி, குருநாகல்" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். விண்ணப்பப் படிவம் இடப்படுகின்ற கடித உறையின் இடது மேல் மூலையில் புடவைக் "கைத்தொழில் ஆலோசகர் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்தல் - 2016" என்று குறிப்பிடப்படல் வேண்டும். (தற்போது அரச/மாகாண அரச சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப்பத்திரங்களை திணைக்களத் தலைவர் ஊடாக அனுப்ப வேண்டும்.)

8.2 **கையொப்பத்தை உறுதிப்படுத்தல்**.- இவ் உறுதிப்படுத்தல் அரச பாடசாலை ஒன்றில் அதிபர்/சமாதான நீதவான்/சத்தியப் பிரமாண ஆணையாளர்/சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு/முப்படையின் அதிகாரத்தினை உடைய அலுவலர்/பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பதவியினை வகிக்கும் அலுவலர் ஒருவர் அல்லது 20,040 ரூபாவுக்கு மாதாந்த சம்பளத்தினை பெறும் அரச/ மாகாண அரச சேவை அலுவலர் ஒருவரினால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

9. **விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி** : 2016.03.24 ஆகும்.

10. இவ் அறிவித்தலில் காணப்படும் தகைமைகள் அற்ற விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். போட்டிப் பரீட்சைக்கு அனுமதி அட்டை வழங்கப்படுவது, விண்ணப்பதாரி இப்பதவிக்காக தகைமைப் பெற்றுள்ளதாக கருதப்படலாகாது. விண்ணப்பதாரி நேர்முகப் பரீட்சைக்கு அழைத்து உரிய அறிவித்தலின்படி தகைமை உண்டா என்று பரீட்சிக்கும் சந்தர்ப்பத்தில் தேவையான தகைமைகளை பூர்த்தி செய்யப்படவில்லை

என்று தெரியவந்தால் அவரின் நியமனம் பெறுவதற்கான உரிமையினை இரத்துச் செய்யப்படும். எல்லா விண்ணப்பதாரிகளும், உரிய எல்லா தகைமைகளையும் விண்ணப்பப்படிவம் பொறுப்பேற்கப்படும் திகதிக்கு அல்லது அதற்கு முன் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் கட்டாயமாகும்.

11. **விண்ணப்பதாரிகளின் ஆள் அடையாளம்.**- விண்ணப்பதாரிகள் தாம் தோற்றுகின்ற எல்லா பாடங்களுக்காகவும் தமது ஆளடையாளத்தினை கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணத்தினால் பரீட்சை மண்டப மேற்பார்வையாளருக்கு உறுதிப்படுத்தல் வேண்டும்.

(1) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை;
(2) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

**குறிப்பு**.-
பரீட்சை மண்டபத்தில் தமது அடையாளத்தினை உறுதிப்படுத்துவதற்கு இயலாது போகின்ற விண்ணப்பதாரிகள் பரீட்சைக்குத் தகுதியற்றவர்கள் என்று கருதப்படும்.

12. எந்தவொரு விண்ணப்பதாரிக்கும் நுழைவுப் பத்திரம் குறைந்தது 7 நாட்களுக்கு முன் கிடைக்காமல் போனால் அது பற்றி உடனடியாக செயலாளர், வடமேல் மாகாண சபை அரச சேவை ஆணைக்குழு, மாகாண சபை அலுவலகத் தொகுதி, குருநாகல் எனும் முகவரிக்கு அறிவித்தல் வேண்டும். அவ்வாறு அறிவித்துகீழ் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களை சமர்ப்பித்தல் வேண்டும்:-

(அ) பரீட்சையின் பெயர் ;
(ஆ) விண்ணப்பதாரியின் முழுப்பெயரும், முகவரியும்;
(இ) விண்ணப்பப்படிவம் அனுப்பிய முகவரி, பதிவு செய்யப்பட்ட இலக்கம், தபால் அலுவலகமும் திகதியும்.

13. எந்தவொரு விண்ணப்பதாரிக்கும் நியமனம் பெறுவதற்கு முன்பு எச்சந்தர்ப்பத்திலாவது எந்தவொரு விண்ணப்பதாரிக்கு தகைமை இல்லை என்று தெரியவந்தால் அவருக்கு பதவி வழங்கப்படமாட்டாது. நியமனம் கிடைத்த பின்பு அல்லது பொய்யான தகவல்களை சமர்ப்பித்துள்ளது பற்றி அல்லது உண்மையான தகவல்களை வேண்டும் என்றே மறைத்துள்ளார் என்று தெரியவந்தால் சேவையில் இருந்து நீக்குதல் அல்லது முடிவுறுத்தப்படும்.

14. தற்போது அறிவிக்கப்பட்டுள்ள வெற்றிடங்களும் இதன் பின்பு ஏற்படுகின்ற வெற்றிடங்களையும் இப் பரீட்சையில் சித்தியடைகின்றவர்கள் இருப்பின் அவர்களினால் வெற்றிடங்களை நிரப்புவது சம்பந்தமாகவும் விண்ணப்பம் கோரும் அறிவித்தலுக்குரிய தகவல்கள் அல்லது அவ் அறிவித்தலினால் கூறப்படாத வேறு தகவல்கள் பற்றி வடமேல் மாகாண சபை அரச சேவை ஆணைக்குழுவின் தீர்மானம் கடைசித் தீர்மானமாகும்.

வடமேல் மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

காந்தி வேஹெல்ல,
செயலாளர்,
வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு.

மாகாண சபை அலுவலகக் கட்டடத் தொகுதி,
குருநாகல்,
037-2233769
2016, பெப்புருவரி.

மாதிரி விண்ணப்பப் படிவம்

பரீட்சை இலக்கம் : ☐

(அலுவலக உபயோகத்திற்காக)

**வடமேல் மாகாண அரச சேவையில் புடவைக் கைத்தொழில் திணைக்களத்திற்கு புடவைக் கைத்தொழில் ஆலோசகர் (III தரம்) பதவிக்காக ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சை - 2016**

1. 1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :------.
   1.2 முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெபிடல் எழுத்தில்) :------.
   1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.
   1.4 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்தில்) :----.
   1.5 தேசிய அடையாள அட்டை இலக்கம் :- ☐☐☐☐☐☐☐☐☐☐

2. 2.1 நிரந்தர முகவரி :----.

2.2 தொலைபேசி இலக்கம் :- சொந்த .................... கடமை ......................

3. ஆண், பெண் பால் (உரிய கூட்டினுள் ✓ அடையாளமிடுக)

பெண் ☐ ஆண் ☐

4. பரீட்சைக்குத் தோற்றுகின்ற மொழி (உரிய கூட்டினுள் ✓ அடையாளமிடுக)

சிங்களம் ☐ தமிழ் ☐ ஆங்கிலம் ☐

5. பிறந்த திகதி : ஆண்டு :----. மாதம் :----. திகதி :----.

5.1 விண்ணப்பப்படிவம் பொறுப்பேற்கப்படும் கடைசி திகதியாகிய 2016.03.19 ஆந் திகதிக்கு வயது :

வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

6. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் (விண்ணப்பப்படிவம் கோரப்படும் அறிவித்தலில் 3.1 இன் கீழ்)

(அ) க. பொ. த. (சா.த.) பரீட்சைக்குத் தோற்றிய வருடமும், பரீட்சை சுட்டிலக்கம்

முதல் தடவை : ஆண்டு :-----. இரண்டாவது தடவை : ஆண்டு :-----.

பரீட்சை சுட்டெண் :-----. பரீட்சை சுட்டெண் :-----.

| பாடம் | பெற்றுக்கொண்ட சித்தி | | பாடம் | பெற்றுள்ள சித்தி | |
|---|---|---|---|---|---|
| | முதலாவது அமர்வு | இரண்டாவது அமர்வு | | முதலாவது அமர்வு | இரண்டாவது அமர்வு |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

(ஆ) (i) க. பொ. த. (உயர் தர) பரீட்சைக்குத் தோற்றிய ஆண்டு :-----.

(ii) பரீட்சை சுட்டிலக்கம் :-----.

| பாடம் | பெற்றுக்கொண்ட சித்தி | பாடம் | பெற்றுக்கொண்ட சித்தி |
|---|---|---|---|
| | | | |
| | | | |

(இ) தொழிற் தகைமை (அறிவித்தலில் இலக்கம் 3.2 இன் கீழ் கற்றுள்ள பாடநெறி பற்றி தெளிவாக குறிப்பிடவும்.) இத்தகவல்கள் தெளிவாகவும் சரியாகவும் குறிப்பிடப்படாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

| நிறுவனம் | கற்றுள்ள பாடநெறி | காலம் | சித்தி | சான்றிதழ் இலக்கமும் திகதியும் |
|---|---|---|---|---|
| | | | | |

7. பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு இலக்கம் :-----.
திகதி :-----.
பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொண்ட பிரதேச செயலகம் :-----.

பற்றுச்சீட்டை இக்கூட்டினுள் கழராதவாறு ஒட்டவும்.

8. ............... ஆகிய என்னால் இவ்விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனக்குத் தெரிந்த வரையில் உண்மையானதும் சரியானதும் என்றும் இத்தால் உறுதிசெய்கின்றேன். இதில் உள்ளடங்கும் ஏதேனும் தகவல்கள் தவறானது அல்லது உண்மைக்கு மாறானது என்று தெரியவந்தால் வடமேல் மாகாண சபையின் ஆலோசகர் III ஆம் தரத்தின் பதவிக்கு நியமிப்பதற்கான எனது உரிமையினை கவனத்தில் எடுக்கப்படமாட்டாது. எனக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்வதற்கும் முடியுமென்பதனையும் நான் நன்கறிவேன்.

------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை உறுதிப்படுத்தல்

(தேவையற்ற வசனங்களை வெட்டிவிடவும்.)

இவ்விண்ணப்பப் படிவத்தினை சமர்ப்பிக்கின்ற திரு./ திருமதி/ செல்வி .......................................... என்பவரை நான் தனிப்பட்ட வகையில் அறிந்துள்ளேன் என்றும், பரீட்சைக் கட்டணம் செலுத்தி உள்ளார் என்றும் இலக்கம் .......................... கான பற்றுச்சீட்டினை ஒட்டியுள்ளார் என்றும், அவர்/அவள் ................ ஆந் திகதி என் முன்னிலையில் அவரது கையொப்பத்தை இட்டார் என்றும் இத்தால் உறுதி செய்கின்றேன்.

உறுதி செய்பவரின் பெயர் :-----.

கையொப்பம் :-----.

பதவியும் பதவி முத்திரையும் :-----.

(இவ் உறுதிப்பாட்டினை அரச பாடசாலை ஒன்றில் அதிபர்/ சமாதான நீதவான்/ சத்தியப் பிரமாண ஆணையாளர்/ சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு/முப்படையின் அதிகாரத்தினை உடைய உத்தியோகத்தர்/பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பதவியினை வகிக்கும் உத்தியோகத்தர் ஒருவர் அல்லது 20,040 ரூபா மாதாந்த சம்பளத்தினை பெறும் அரச/ மாகாண அரச சேவை உத்தியோகத்தர் ஒருவரினால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.)

**அரச அல்லது மாகாண அரச சேவையில் தற்போது சேவையாற்றும் விண்ணப்பதாரிகளுக்காக திணைக்களத் தலைவரின் பரிந்துரை :**

(தேவையற்ற வசனங்களை வெட்டிவிடவும்.)

இவ் விண்ணப்பதாரி ஆகிய .......................................... திரு./ திருமதி/ செல்வி ................................. இத்திணைக்களத்தில் சேவையில் உள்ளவர் என்றும். அவர் நிரந்தரப் பதவியினை உடையவர் என்றும், இப்பரீட்சையின் பெறுபேறுப்படி நியமனத்திற்காக தேர்ந்தெடுக்கப்பட்டால் அவர் தற்போதுள்ள பதவியில் இருந்து விடுவிப்பேன் என்றும், அவரின் விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் இத்திணைக்களத்தில் உள்ள ஆவணங்களுடன் சரி, பிழை பார்க்கப்பட்டுள்ளது என்றும் இந்த பரீட்சைக்கு உரிய பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டளைப்படி இப்பரீட்சைக்கு அவர் தகுதி உடையவர் என்று உறுதிப்படுத்துகின்றேன்.

(அறிவித்தலில் 3.1 கீழ் உள்ள விசேட அறிவித்தல்களுக்கு அமைய விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரியாயின் மாத்திரம் இப்பகுதியினை பூர்த்தி செய்யவும்.)

இவ்விண்ணப்பதாரி வடமேல் மாகாண புடவைக் கைத்தொழில் திணைக்களத்திற்குரிய ................... புடவைக் கைத்தொழில் மத்திய நிலையத்தில் ..................... தொடக்கம் ................ வரை தொழில்நுட்பவியலாளராக சேவை செய்துள்ளார்/ சேவை செய்கின்றார் என்று உறுதிப்படுத்துகின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்
(பதவி முத்திரையை வைக்கவும்)

2-836

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.